postmortem report-*லும் மது அருந்தியதற்கான அறிகுறியே தெரியவில்லை. இருந்தாலும்கூட, இன்னமும் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. முழுமையான விசாரணை* test-*க்கு வந்திருக்கின்றது. அறிக்கை வந்ததற்குப் பின்னால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த நால்வருக்கும் உண்டான நிவாரணத் தொகை குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது மற்றும் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதும் அவர்கள் வாழ்வாதாரமான விசைப் படகுகள் இலங்கைக் கடல் அலையிலிருந்து சீரழிக்கப்படுவதையும் இந்த மன்றத்தில் நாம் பேசி வருகிறோம். இலங்கை நாடாளுமன்றத்தில், நேற்றையதினம், ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றார்கள். அதில், எல்லை தாண்டி வருகின்ற மீனவர்களைக் கைது செய்கின்றபோது அவர்களது படகுகளுக்கு, 50,000 ரூபாய் அபராதம் விதிக்க வேண்டும் எனவும், இரண்டு ஆண்டுகளுக்குமேல் சிறை தண்டனை வழங்க வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 134 படகுகள்; அதற்குப்பிறகு 143 படகுகள்; இன்றைக்கு 160 படகுகளுக்கும் மேலாக அங்கே படகுகள் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டிருக்கின்றன. 60-க்கும் மேலான மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.*

முற்பகல் 11-50

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டணத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் நேற்றைக்கு முன்தினம் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது, இலங்கைக் கடற்படையினரால் அவர்களுடைய படகு மூழ்கடிக்கப்பட்டு, அதிலே ஒரு மீனவர்

அருகிலே இருந்த படகில் ஏற்றப்பட்டிருக்கிறார். இன்னும் 3 மீனவர்களுடைய நிலைமை என்னவென்று தெரியவில்லை. இப்படி இருக்கின்ற நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக நான் மன்றாடி ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், இதுபோன்று கைது செய்யப்பட்ட மீனவர்களை அவர்களுடைய வாழ்வாதாரமான விசைப் படகுகளை, மத்திய அரசுடன் தொடர்புகொண்டு எப்படி உடனுக்குடன் மீட்டுக் கொடுத்தாரோ, அதேபோன்று, உடனடியாக நீங்கள் நடவடிக்கை எடுத்து, தமிழக மீனவர்களையும், அவர்களுடைய வாழ்வாதாரமான விசைப் படகுகளையும் மீட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, போதும் உட்காருங்கள்.

திரு. கே.பி.பி. சாமி: இன்றைக்கு மீனவர்கள் பஞ்சப்பராரிகளாக பரிதவிக்கக்கூடிய நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இதற்குமேல் போனால் வேறுமாதிரியான பிரச்சினைகள் வரும். உட்காருங்கள்.

திரு. கே.பி.பி. சாமி: எனவே, தமிழக அரசு சிறப்புக் கவனம் செலுத்தி, மீனவர்களைக் காப்பாற்றிட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்களும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று சட்டம் ஒன்றைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கின்ற நேரத்தில், கடல் எல்லையைத் தாண்டினால் அவர்களைக் கைது செய்வதோடு மட்டுமல்லாமல், 20 கோடி

2017 ஜுலை 7] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

ரூபாய் வரை அபராதம் செலுத்தும் வகையில் ஒரு கொடிய சட்டத்தினைத் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இலங்கை நாடாளுமன்றம் குறித்து நாம் இங்கே பேச முடியாது. மீனவர் பிரச்சினை குறித்து மட்டும் நீங்கள் பேசுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *இந்தியாவில் காங்கிரஸ் பேரியக்கம் ஆட்சியில் இருந்தபோது பல சம்பவங்கள் இதுபோன்று நடந்திருந்தாலும்கூட உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கைது செய்யப்பட்ட மீனவர்கள் உடனடியாக விடுதலையும் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உடைமைகளும் திரும்ப ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. தற்போது மீனவர்களுடைய பிரச்சினை தொடர்ந்து மிகவும் மோசமான சூழ்நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்சினையில் தனிக் கவனம் செலுத்தி, மத்திய அரசிற்கு தகுந்த அழுத்தம் கொடுத்து, மீனவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும், கேள்விக்குறியாக இருக்கக்கூடிய மீனவர்களுடைய பிரச்சினைகளுக்கு நிரந்தரமாகத் தீர்வு காண்பதற்கும் நடவடிக்கைகள் எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஜெகதாபட்டணம் மீனவர்கள் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்களும் கடிதம் கொடுத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, என்னவென்று சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

*__திரு. எஸ். ரகுபதி:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், மணல்மேல்குடி தாலுகா, கோட்டைப்பட்டணத்தைச் சேர்ந்த 3 மீனவர்களும் மற்றும் ஜெகதாபட்டணத்தைச் சேர்ந்த 5 மீனவர்களும் இந்திய எல்லையான நெடுந்தீவு பகுதியிலே மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது, இலங்கைக் கடற்படையினரால் துரத்தி, தாக்கப்பட்டு, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எப்படி நம்முடைய அவையில் நேரமில்லா நேரம் (zero hour) என்று இருக்கிறதோ, அதைப்போல, கடல் எல்லையைப்*

பொறுத்தவரையில், இந்தியக் கடல் எல்லை, இலங்கைக் கடல் எல்லை என்று இருக்கின்றன. இவை இரண்டிற்கும் மத்தியில் இருப்பது International Zone; Zero Zone. அங்கு யார் வேண்டுமானாலும் செல்லலாம், யார் வேண்டுமானாலும் மீன் பிடிக்கலாம்; எந்த நாட்டுக் கப்பல்களும் அந்தப் பகுதியில் செல்லலாம். இந்திய எல்லைக்குள்ளோ அல்லது இலங்கை எல்லைக்குள்ளோ சென்றால்தான் அது தவறு. ஆனால், இந்திய மீனவர்கள் International Zone–ல் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது இலங்கைக் கடற்படையினர் வேண்டுமென்றே அவர்களைத் துரத்திப் பிடித்து, கைது செய்யும் கொடுமையும் நடைபெறுகிறது. இதுபோன்ற நிகழ்வுகளில் இலங்கைக் கடற்படையினரைத் தடுப்பதற்கு இந்தியக் கடற்படை தவறி விடுகிறது. International Zone என்பது நமக்கும் சொந்தம்; எல்லோருக்கும் சொந்தம்; அங்கே மீனவர்கள் மீன் பிடிக்கின்றபோது அவர்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு இந்தியக் கடற்படைக்கு உண்டு. ஆனால், இலங்கையோடு இந்தியா நேசக்கரம் நீட்டிக் கொண்டிருக்கிற காரணத்தினால், மத்திய அரசு அதை கண்டுகொள்ளாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்திய மீனவர்கள் இந்திய எல்லையைத் தாண்டி மீன் பிடிப்பதில் தவறு இல்லை; இலங்கை எல்லைக்குள் சென்று மீன் பிடித்தால்தான் தவறு. International Zone எல்லோருக்கும் பொதுவான ஒன்று. எல்லோருக்கும் பொதுவான இடத்தில் மீன் பிடிப்பது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, subject அவ்வளவுதானே? உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள்.

முற்பகல் 11–55

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு கச்சத் தீவு தாரை வார்க்கப்பட்டதுதான் இந்தப் பிரச்சினைக்கு முழு முதற்காரணமாக இருக்கிறது. (குறுக்கீடுகள்) கச்சத் தீவு 1974 ஆம் ஆண்டு தாரை வார்க்கப்பட்டது. (குறுக்கீடுகள்) “எங்கப்பன் குதிருக்குள் இல்லை” என்பதுபோல் நீங்கள் ஏன் குதிக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) நான் இப்பொழுது ஒன்றும் சொல்லவில்லையே. 1974 ஆம் ஆண்டு யார் யார் ஆட்சியில் இருந்தார்களோ, அவர்களுக்கு இது பொருந்தும். விஷயத்திற்கு வருகிறேன்.

2017 ஜூலை 7] [திரு. டி. ஜெயக்குமார்]

1974 ஆம் ஆண்டு கச்சத் தீவு தாரைவார்க்கப்பட்டது, இது முதல் காரணம். ஏனென்று சொன்னால், 1974 ஆம் ஆண்டுக்கு முன்பு, இலங்கை எல்லை சுருங்கி, இந்திய எல்லை அதிகரித்திருந்த நிலையில், கச்சத் தீவு தாரை வார்க்கப்பட்டதற்கு பின்பு, நம்முடைய எல்லை சுருங்கி, இலங்கையின் எல்லை விரிவடைந்துள்ளது. இதில் நம்முடைய பாரம்பரிய உரிமை என்பது, ஏறக்குறைய 500 ஆண்டுக் காலம் கச்சத் தீவுக்கு அருகில் சென்றுதான் மீன் பிடிப்பதாக இருந்தது. எனவே, கச்சத் தீவை மீட்டாகவேண்டும் என்ற மனப்பான்மையோடுதான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனேயே, இதே கோட்டை கொத்தளத்தில் சுதந்திர தினத்தன்று, “இழந்த கச்சத் தீவை நாம் மீட்டே தீருவோம்” என்று சபதம் ஏற்று, அதனடிப்படையில் அம்மா அவர்கள் தனது பெயரிலேயே உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்தார்கள். அந்த வழக்குக்கு ஆதாரம் என்னவென்று சொன்னால், (குறுக்கீடு) நான் விஷயத்திற்கு வருகிறேன். (குறுக்கீடு) அதில் பாயிண்ட் இருக்கிறது. அதைத்தான் சொல்ல வருகிறேன். அந்தப் பெருபாரி வழக்கில் பாராளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல், சட்ட அங்கீகாரம் இல்லாமல் அதைக் கொடுத்தது தவறு என்ற அந்த ஒரு காரணத்தினைக் காட்டி, இதை இந்திய எல்லையோடு சேர்க்க வேண்டும் என்ற அந்தக் கருத்தோடு, இது உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

நான் எதற்குச் சொல்கிறேன் என்று சொன்னால், அந்தப் பாரம்பரிய உரிமையான அந்தக் கடல் பகுதியில், இன்றைக்கும் நமக்கு உரிமை இருக்கிறது. எனவே, நமக்கு உரிமை இருக்கின்ற அந்தக் கடல் பகுதியில் I.B.L. என்பதே ஒரு கேள்வியாக இருக்கின்றது. அப்படி இருக்கின்ற நிலையில் அந்த இடத்திற்கு நீங்கள் இங்கு வரக் கூடாது என்று சட்டம் போடுவதற்கு இலங்கைக்கு எந்தவித உரிமையும் இல்லை. இந்த நிலைப்பாட்டில்தான் நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு தெளிவாக இருக்கின்றது. எனவே, அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு மத்திய அரசுக்கு இதுகுறித்து கடிதம் எழுதியுள்ளார்கள். எனவே, 143 படகுகள், 50 மீனவர்களை விரைவிலேயே விடுவிக்க வேண்டியதற்கான நடவடிக்கையை அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக எடுக்க இருக்கின்றது. எனவே,

பாக் நீரிணையில் நமக்குள்ள பாரம்பரிய உரிமை பாதிக்கும் வகையில் இலங்கை அரசு போடுகின்ற சட்டம் என்பது எந்தவிதத்திலும் ஏற்புடையது அல்ல. எனவே, இதுகுறித்து மத்திய அரசுக்குத் தெளிவாக அழுத்தம் கொடுக்கப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

3. கவன ஈர்ப்பு

தமிழகத்தில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விடுங்கள். திரு. சாமி, அவ்வளவுதான். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், திரு. அர. சக்கரபாணி, திரு. கு. பிச்சாண்டி, திரு. இ. பெரியசாமி, முனைவர் க. பொன்முடி, திரு. கே.என். நேரு, திரு. கே.ஆர். பெரியகருப்பன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திரு. ஜெ. அன்பழகன், திரு. உ. மதிவாணன், திரு. கே.எஸ்.மஸ்தான், திரு. சபா. ராசேந்திரன், திரு. நா. கார்த்திக், திரு. டி.ஆர்.பி. ராஜா, திரு. அ. நல்லதம்பி, திரு. மா. சுப்பிரமணியன், திரு. ப. சிவகுமார் (எ) தாயகம் கவி, திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. ப. ரங்கநாதன், திரு. எம்.கே. மோகன், திரு. வாகை சந்திரசேகர், திரு. இரா. இராஜேந்திரன், திரு. டி. செங்குட்டுவன் ஆகியோரும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. கரி. இராமசாமி மற்றும் திருமதி எஸ். விஜயதரணி ஆகியோரும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள இடங்களில் போதிய குடிநீர் வழங்க வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.